www.lkedu.lk

முழுப்பதிப்புரிமையுடையது.

TP.NO - 0741819705



# JAFFNA EDUCATION

Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education Jaffna education

**YouTube channel**

**3**

## தரம் - 5 புலமைப்பரிசில் விசேட மாதிரிப்பரீட்சை - 2022

**வினாத்தாள் I**

சுட்டெண் :-.....

ஒரு மணித்தியாலம்

ஆசிரியர் -
**P.A.சசிகுமார்-B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass.Dip.in.Primary(Merid). SLEAS (Primary)**

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | **பெயரும் ஒப்பமும்** |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர்**<br>மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| பெற்றோர் | |
| ஆசிரியர் | |




zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

- **1,2 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

*01.*






*(1)*




*(2)*



*(3)*

*02.*





*(1)*



*(2)*



*(3)*

*03.* கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டுள்ளது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)


*04.* கீழே தரப்பட்டுள்ள உருக்களில் நேர்கோடுகளையும் வளைகோடுகளையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

*05.* கீழே தரப்பட்ட உருக்களில் B,D ஆகிய இரண்டு பிராணிகளையும் ஏனைய பிராணிகளில் இருந்து வேறுபடுத்தும் பொருத்தமான முறையாக அமைவது எது?



A



B



C



D



E

*(1)* புற்களை உணவாக உண்ணுதல்


*(2)* இரவு நேரத்தில் உறங்குதல்

*(3)* மனிதர்களுக்குப் பயனுள்ளதாக அமைதல்

JAFFNA EDUCATION YOUTUBE

- *06.07* ஆகிய வினாக்களில் ▲ = 2 ★ = 3 △ = 5 ☆ = 6 ✧ = 8 எனப் பிரதியீடு செய்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

*06.*




*(1)* 

*(2)* 

*(3)* 

*07.*



(1) 

(2) 

(3) 

*08.* கட்டங்கள் A,B,C ஆகியவற்றினை அவதானித்து கீழே தரப்பட்ட சரியான கூற்றினைத் தெரிவு செய்க

| | | | |
|---|---|---|---|
| ழ | A | ப | |
| 5 | * | # | |
| | B | ம | |
| 7 | R | 5 | * |

A

| | | | |
|---|---|---|---|
| | 2 | N | கே |
| | F | * | 9 |
| | | ப | |
| 8 | R | 6 | * |

B

| | | | |
|---|---|---|---|
| | H | 3 | எ |
| | | 4 | z |
| | k | | ஒ |
| 7 | R | 5 | + |


C

*(1)* கட்டம் A இல் உள்ள குறியீடுகளின் எண்ணிக்கை கட்டம் B,C ஆகியவற்றில் உள்ள குறியீடுகளின் எண்ணிக்கைக்கு சமன் ஆகும்


*(2)* கட்டம் A, கட்டம் B என்பவற்றில் உள்ள இலக்கங்களின் எண்ணிக்கை சமன் ஆகும்.

*(3)* கட்டங்கள் A,B,C இல் ஆங்கில எழுத்துக்களும் இலக்கங்களும் சம எண்ணிக்கையில் உள்ளன.


*09.* தரப்பட்ட மூன்று உருக்களிலும் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை *10,3,8* இருக்கக்கூடிய உரு எது?



*(1)*



*(2)*



*(3)*

*10.* வானில் பறக்கும் பூச்சி நான்
எனக்கும் நான்கு சிறகுதான்
பூவை நாடிச் செல்லுவேன்
ஊனை விரும்பி உண்ணுவேன்.
இப்பாடலில் கூறப்படும் பூச்சி எது?

*(1)* வண்ணத்துப்பூச்சி *(2)* தும்பி *(3)* ஈசல்


www.lkedu.lk

11. நிறுவனமொன்றில் பணிபுரிபவர்களில் ஒரு குழுவில் பத்து ஊழியர்கள் உள்ளனர். அவர்களுக்கு 1 தொடக்கம் 10 வரை இலக்கங்கள் வழங்கப்பட்டு இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை தொடரிலக்கங்களுக்கு ஏற்ப அனைவருக்கும் ஒரு நற்சிந்தனை கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மூன்றாவது இலக்கம் வழங்கப்பட்ட ஊழியர் வைகாசி மாதம் முதலாவது தடவை தனது நற்சிந்தனையைக் கூறியிருந்தார் எனின், அடுத்து அவர் இரண்டாவது தடவை நற்சிந்தனை கூறவேண்டிய மாதம் எது?


(1) ஐப்பசி (2) கார்த்திகை (3) தை

*12. முதலில் தரப்பட்டுள்ள சதுர வடிவத் தாளினை குறித்த கோடுகள் வழியே வெட்டி எடுத்து உருவாக்கக்கூடிய உரு எது?*






(1)



(2)



(3)

*13. கூட்டுத்தொகை 21 இனைப் பெறத்தக்க வகையில் 1 தொடக்கம் 15 வரையுள்ள எண்களில் எத்தனை எண் சோடிகள் உள்ளன?*

(1) 10 (2) 5 (3) 4

*14. கீழே உள்ள அட்டவணையில் உள்ளவர்களில் அதிக தடவை சூரியனைச் சுற்றி வந்தவரையும் குறைந்த தடவை சூரியனைச் சுற்றி வந்தவரையும் குறிக்கும் நாடுகள் முறையே.*

| பிறந்த நாடுகள் | பெயர் | பிறந்த திகதி |
|---|---|---|
| இந்தியா | சுரேஸ் | 2012.06.01 |
| இலங்கை | சாரா | 2010.08.23 |
| மாலைதீவு | நிவேதா | 2010.01.01 |
| அமெரிக்கா | சுகாஸ் | 2009.12.12 |


*(1)* இந்தியா,இலங்கை
*(2)* அமெரிக்கா,இந்தியா
*(3)* மாலைதீவு,இலங்கை

15. பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.

A – கடதாசிக் குப்பைகள் போட . சிவப்பு நிறத் தொட்டி எதற்கு?
B – பொலித்தீன், பிளாஸ்ரிக் போட ஆ... எல்லாம் அறிந்து வைத்திருக்கிறீர்களே!
C – உண்ட உணவில் எஞ்சியதைப்போட. செம்மஞ்சள் நிறத்தொட்டி எதற்கு?
D – இதோ பாருங்கள் நான்கு நிறத் தொட்டிகள். நீல நிறத் தொட்டி எதற்கு?
E – போத்தல் தகரம் போன்றவை போட. பச்சை நிறத்தொட்டி எதற்கு?

இந்தக் கலந்துரையாடல் மிகப்பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிக.

(1) DCAEB (2) DACEB (3) DAECB

16. 

படத்தில் காட்டப்பட்ட அட்டையானது மூன்று புள்ளிக்கோடுகள் வழியேயும் மடிக்கப்பட்டு ஆங்கில எழுத்தொன்று ஆக்கப்பட்டது. அவ்வாறு ஆக்கப்பட்ட எழுத்து எது?



*(1)*




*(2)*



*(3)*


www.lkedu.lk


17. 


அருகே படத்தில் காட்டப்பட்டவாறு பாத்திரம் D இனுள் நீர் விடப்பட்டால் முதலில் நிரம்பும் பாத்திரம் எது?

(1) A (2) B (3) C

18. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.








(1) 1
(2) 3
(3) 2

19. சீருடை அணிந்தவர்கள் அனைவரும் மாணவர்கள் அல்லர் எனின்,

(1) சீருடை அணிந்தவர்கள் ஒருபோதும் மாணவர்கள் அல்லர்.
(2) மாணவரல்லாத எல்லோரும் சீருடை அணிந்தவர்கள் ஆவர்.
(3) சில சீருடை அணிந்தவர்கள் மாணவர்கள் அல்லர்.

20. ஒரு பாடசாலையில் கிரிக்கெட், கரப்பந்து, காற்பந்து என்பவற்றை இரசிப்பவர்களின் எண்ணிக்கை 110, 105, 116 என ஒழுங்குமுறையின்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரிக்கெட்டினை இரசிப்பவர்களின் எண்ணிக்கை ஆண்களை விட ஐந்து பெண்கள் அதிகமாகும் எனின், கிரிக்கெட்டை இரசிப்பவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 116 (2) 110 (3) 105


21. 31 நாட்களைக்கொண்ட ஒரு மாதத்தில் திங்கட்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 28ஆம் திகதி என்ன நாளாகும்?

(1) வியாழக்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) சனிக்கிழமை

22. ஒரு செவ்வக வடிவமான கண்ணாடித் துண்டானது மூன்று துண்டுகளாக உடைந்தது எனின், உடைந்த துண்டுகளில் இரண்டாவது துண்டு எது?

(1)



(2)



(3)




23. பாரதி குமணனின் தந்தை ஆவார். சிந்துஜன் பாரதியின் தம்பி ஆவார். ரேவதி குமணனின் ஒரே தங்கை ஆவார். சிந்துஜனும் ரேவதியும் சந்திக்கும் போது ரேவதி சிந்துஜனை அழைக்கும் உறவுமுறை எது?

(1) மச்சாள் (2) சிற்றப்பா (3) அத்தை

JAFFNA EDUCATION YOUTUBE

www.lkedu.lk

24. 


அருகே உள்ள உருவில் பிள்ளை ஒன்று உண்டியலில் சேர்த்த குற்றி நாணயங்கள் வகை குறித்துக் காட்டப்பட்டுள்ளன 5 ரூபாய்க் குற்றிகளின் பெறுமதி 100 ரூபாய் எனின் 10 ரூபாய் குற்றிகளின் பெறுமதி யாது?

*(1)* 80 ரூபாய் *(2)* 160 ரூபாய் *(3)* 100 ரூபாய்


25. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின்

- முதலாம் இலக்கத்தில் இருந்து மூன்றாம் இலக்கத்தைக் கழித்தால் இரண்டாம் இலக்கமும்.
- இரண்டாம் இலக்கத்துடன் நான்காம் இலக்கத்தைக் கூட்டினால் மூன்றாம் இலக்கமும் கிடைக்குமெனின், அவ்வெண் கீழே தரப்பட்ட இலக்கங்களில் யாதாக இருக்கலாம்?

(1) 8532 (2) 6243 (3) 8352


26. பெட்டியொன்றில் சிவப்பு நிற மாபிள்கள் 18, பச்சை நிற மாபிள்கள் 9, பெரிய சிவப்பு நிற மாபிள்கள் 5, சிறிய பச்சை நிற மாபிள்கள் 3 காணப்பட்டன எனின், பெட்டியில் உள்ள மாபிள்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

*(1) 35* *(2) 19* *(3) 27*

27. 


உருவில் சதுர வடிவான வரைபடமொன்று காட்டப்பட்டுள்ளது. இதன்படி A என்ற இடத்தில் இருந்து அம்புக்குறி வழியே B வரையான தூரம் எத்தனை மீற்றராகும்?

(1) 14m (2) 10 m (3) 16 m

28. 


அருகே தரப்பட்டுள்ள தராசு அமைப்பானது சமநிலையாக உள்ளது எனின், கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகப் பொருத்தமான கூற்று எது?

*(1)* பக்கம் A இல் உள்ள குரங்கை விட பக்கம் B இல் உள்ள குரங்கு நிறை கூடியது.

*(2)* பக்கம் B இல் உள்ள குரங்கை விட பக்கம் A இல் உள்ள குரங்கு நிறை கூடியது.

*(3)* இரண்டு குரங்குகளினதும் நிறை ஒன்றுக்கொன்று சமனாகும்.

29. கீழே தரப்பட்ட உருவானது சம அளவான சதுர முகிகளையும் சம அளவான கனவுருக்களையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டி ஆக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள சதுரமுகிகளின் , கனவுருக்களின் எண்ணிக்கை சமனானது ஆகும். எனின், சதுரமுகிகளின் எண்ணிக்கை எத்தனை?




(1) 2 (2) 3 (3) 4

JAFFNA EDUCATION YOUTUBE

www.lkedu.lk

30. பின்வரும் இரு திண்மங்கள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.




(1) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையிலும் குறைவு
(2) உச்சிகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையிலும் குறைவு
(3) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையிலும் குறைவு


31. பெட்டியொன்றில் ஒரு தொகை மாம்பழங்கள் காணப்பட்டன. திவாகர் அம் மாம்பழங்களில் ஒன்றைச் சாப்பிட்ட பின் மூன்று சம பங்குகளாகப் பிரித்து ஒரு பங்கை எடுத்தான். இவ்வாறே அடுத்தடுத்து கரனும் கரனைத் தொடர்ந்து சுமனும் செய்தனர். அதன் பின்னர் எஞ்சிய ஆறு மாம்பழங்களையும் திவாகரின் தம்பி எடுத்துக்கொண்டார் எனின், பெட்டியில் இருந்திருக்கக்கூடிய மாம்பழங்கள் எத்தனை?

(1) 19 (2) 28 (3) 25

32. புகையிரதமானது இரண்டு மரங்களையும் முழுமையாகக் கடந்து செல்வதற்கு பயணிக்க வேண்டிய மொத்தத் தூரம் யாது?




(1) 100m (2) 200m (3) 300m

33. 


அருகில் வட்டவடிவ ஓட்டப் பாதையில் கரீஸ் மற்றும் சுமன் ஆகியோர் p என்ற இடத்தில் இருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டு அம்புக்குறி காட்டும் திசையில் மூன்று சுற்றுக்கள் ஓடுகின்றனர். சுமனின் வேகத்திலும் இரண்டு மடங்கு வேகத்தில் கரீஸ் ஓடுகின்றார் எனின், R என்ற புள்ளியில் கரீஸ் ஓடும்போது சுமன் ஓடிக்கொண்டிருக்கக்கூடிய புள்ளி எது?

(1) P (2) R (3) S

34. குறித்த உருவினை புள்ளிக்கோடு வழியே அம்புக்குறி காட்டும் திசையில் மடிப்பதனால் பெறக்கூடிய உரு எது?



(1) (2) (3)

35. கீழே தரப்பட்டுள்ள கடிகாரம் ஐந்து மணியைக் காட்டும் போது மணித்தியால முள்ளானது எத்தனை நிமிடங்களிற்கான இடைவெளிகளைக் கடந்திருக்கும்?



(1) 60 நிமிடங்கள்
(2) இருபத்தைந்து நிமிடங்கள்
(3) ஐந்து நிமிடங்கள்

www.lkedu.lk

- அட்டவணையில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப 36ஆம், 37ஆம் வினாக்களுக்கு சரியான விடைகளைத் தெரிவு செய்க.

| மாதங்கள் | பெப்ரவரி | ஏப்ரல் | யூன் | ஆகஸ்ட் | ஒக்டோபர் | A |
|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 28 | 58 | 88 | B | 150 | 181 |

*36.* A *என்ற இடத்தில் வரவேண்டிய மாதம் எது?*

(1) *ஜனவரி* (2) *டிசெம்பர்* (3) *நவம்பர்*

*37.* B *என்ற இடத்திற்குப் பொருத்தமான எண் எது?*

*(1) 118* *(2) 119* *(3) 128*

*38. கீழே காட்டப்பட்டுள்ள பழங்களில் அதிக நிறை கொண்ட பழம் எது?*



**155g** **125g** **150g** **170g** **170g**

*(1) கொய்யாப்பழம்* *(2) மாம்பழம்* *(3) தோடம்பழம்*

*39. பெட்டி* A *இல் 8 பச்சை நிறப்பந்துகளும், பெட்டி* B *இல் 7 சிவப்பு நிறப் பந்துகளும் உள்ளன. பிள்ளையொன்று பெட்டி* A *இலிருந்து 3 பந்துகளை* B *பெட்டிக்கும், பெட்டி* B *இலிருந்து 4 பந்துகளை* A *பெட்டிக்கும் மாற்றியது. தற்போது பெட்டிகளில் உள்ள பந்துகளின் எண்ணிக்கை முறையே.*

*(1) பெட்டி* A *இல் 5 பச்சை, 4 சிவப்பு , பெட்டி* B*இல் 3 சிவப்பு, 4 பச்சை நிறப் பந்துகள்*

*(2) பெட்டி* A *இல் 4 பச்சை, 5 சிவப்பு , பெட்டி* B*இல் 3 பச்சை, 3 சிவப்பு நிறப் பந்துகள்*

*(3) பெட்டி* A *இல் 5 பச்சை, 4 சிவப்பு , பெட்டி* B*இல் 3 பச்சை, 3 சிவப்பு நிறப் பந்துகள்*

*40. கீழே தரப்பட்டுள்ள எண்களில் ஒரு கோலம் உண்டாவதற்கு ஒரு எண் நீக்கப்படவும் வேறொரு எண்ணைச் சேர்க்கப்படவும் வேண்டும். அவ்விரண்டு எண்களையும் முறையே கொண்ட விடை எது?*

| *4, 9, 15, 22, 30, 38, 49, 60* |
|---|

*1) நீக்கப்படவேண்டிய எண் - 30, சேர்க்கப்படவேண்டிய எண் - 32*
*2) நீக்கப்படவேண்டிய எண் - 38, சேர்க்கப்படவேண்டிய எண் - 39*
*3) நீக்கப்படவேண்டிய எண் - 22, சேர்க்கப்படவேண்டிய எண் - 26*

★★★

**முற்றிலும் இலவசமாக** இந்த வினாத்தளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்

JAFFNA EDUCATION YouTube

www.lkedu.lk

முழுப்பதிப்புரிமையுடையது

TP.NO - 0741819705



# JAFFNA EDUCATION

## YouTube channel

3

## தரம் - 5 புலமைப்பரிசில் விசேட மாதிரிப்பரீட்சை - 2022

**வினாத்தாள் II**

சுட்டெண் :-.....

1 மணித்தியாலம் 15 நிமிடம்

ஆசிரியர் -
**P.A.சசிகுமார்- B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass) Dip.in.Primary(Merid). SLEAS**

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர்**<br>மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| பெற்றோர் | |
| ஆசிரியர் | |

STUDY ONLINE

# இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




## இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

**WWW.LKEDU.LK**

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

**1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்**

மிக அதிகமான பரப்பளவில் மணல் மற்றும் மணற்குன்றுகள் நிறைந்த பகுதி பாலைவனம் எனப்படும். உலகின் மொத்தப் பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பாலைவனம் ஆகும். இது உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் கடினமான பகுதியாகும். இந்தப்பகுதிகளில் புழுதிப்புயல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதன் காரணமாக மணற்குன்றுகள் உருவாகின்றன. பாலைவனங்கள் ஆண்டுக்கு இருநூற்றைம்பது மில்லி மீற்றருக்கு குறைவாக மழையைப்பெறுகின்றன. அதிக வறட்சியைத் தாங்கி வளரும் கள்ளி, பனை போன்ற சில தாவரங்கள் மட்டுமே இங்கு வளருகின்றன. கங்காரு, எலி, ஆமை சில வகைப்பாம்புகள், பல்லிகள், ஒட்டகங்கள் போன்றவை பாலைவனச்சூழலைச் சமாளித்து உயிர்வாழும் உயிரினங்களாகும்.

- ***பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.***

(i) உயிரினங்கள் வாழ்வதற்கு கடினமான பகுதி எது?

……

(ii) பாலைவனத்தில் நிறைந்திருப்பவை எவை?

……..

(iii) பாலைவனத்தில் மணற்குன்றுகள் உருவாகக் காரணமானவை எவை?

……..

(iv) "மீண்டும் மீண்டும்" என்பதனைக் குறிப்பிடுவதற்காகப் பந்தியில் பயன்படுத்தப்பட்ட சொல் எது?

……

(v) ' செழிப்பு' என்பதன் எதிர்க்கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

…… ……

(vi) பாலைவனச் சூழலைச் சமாளித்து உயிர் வாழும் உயிரினங்கள் நான்கு தருக.

……

**2. அ.்றிணை நிகழ்கால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக**

(1) புழுதிப் புயல்கள் (2) உருவாகின்றன (3) உயிர்வாழும்

**3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

கற்றுக் / கோபத்தைக் / வாழலாம் / கொண்டால் / கட்டுப்படுத்தக் / சிறப்பாக

……

**4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(i) பிள்ளை மாலையில் வீட்டிற்குச் சென்றது. (……..)

(ii) அவன் அழகான சித்திரங்களை வரைந்தான். (……..)

(iii) கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது. (……)

(iv) விவசாயிகள் மண்வெட்டியால் கொத்தினான். (……..)

**5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

ஆற்றங்கரை வாழ்வு அவ்வளவுதான் என்று கூறி மற்றைய மரங்கள் அரச மரத்திற்காகப் பரிதாபப்பட்டன

www.lkedu.lk

சுட்டெண்.....

**6. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

கூடி ..... கோடி நன்மை.

(ii) **பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

தாய் நாட்டை நேசிப்பவன் .....

**7. தரப்படும் கருத்திற்குப் பொருத்தமான ஆத்திசூடியைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக**

நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே

(சித்திரம் பேசேல் / நுண்மை நுகரேல் / பேதமை அகற்று)

**8. பின்வரும் வாக்கியத்தை இறந்தகாலத்தில் எழுதுக.**

அவர்கள் விடை கூறுவார்கள்.

.....

**9. *தரப்படும் சொல்லைப் பிரித்து எழுதுக*** அறிவியல் - ..... + .....

**10.**

**அழைப்பிதழ்**

விபுலானந்தர் வித்தியாலய மாணவர்களின்

**கலைவிழா**

காலம் - 18.12.2022
நேரம் - காலை 9.00 மணி
இடம் - பாடசாலைக் கேட்போர் கூடம்

**இவ் இனிய நிகழ்வைக் கண்டு களிக்க வருமாறு**
**உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**ஆரம்பப் பிரிவு மாணவர்கள்**

(i) இவ் அழைப்பிதழ் எவ்விழாபற்றியது? .....

(ii) இவ்விழாவினை விபுலானந்தர் வித்தியாலத்தில் ஏற்பாடு செய்தவர்கள் யார்?.....

.....


(iii)இவ்விழா நடைபெறும் இடம் எது? .....

**11.** தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Picture;..... (ii) Mountain ;.....

**12. *தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.***





..... .....

**13. *கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக***

(i) four/cat/has/ My/legs ;.....

(ii) to/canteen /the / am/ going / I ;.....

**14. " *இந்தகன்ன* " *என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.***

.....

www.lkedu.lk


**15.** **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.**

"உமது இலக்கம் என்ன?" .....

**16.** பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

9090 .....

**17.** எண் சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக




.....

**18.** பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

*7963, 5789, 7893* ....., ....., .....,

**19.**

| | | |
|---|---|---|
| 15 | | 11 |
| | 19 | |
| 3 | | 7 |

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொதுவித்தியாசம் 4 ஆகவுள்ள எண் கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.

3, ....., ....., ....., .....,

**20.** ஒரு விலங்குப் பண்ணையில் 2019 பசு மாடுகளும் 949 காளை மாடுகளும் உள்ளன.


(i) பண்ணையில் உள்ள மாடுகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(ii) இப் பண்ணையில் காளை மாடுகளிலும் பார்க்க எத்தனை பசு மாடுகள் கூடுதலாக உள்ளன?

.....

**21.** பின்வரும் உருவில் $\frac{2}{3}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந் தீட்டுக.



**22.** 24 மணித்தியாலக் கடிகாரம் 17:20 எனக் காட்டும் போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது?

.....

**23.** 904 இனை 4 இனால் வகுக்கும்போது விடை யாது? .....

**24.** பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| கடலை | 3kg | 150 | 00 | (i)..... | ..... |
| அரிசி | 500g | (ii)..... | ..... | 180 | 50 |
| மொத்தப் பணம் | | | | 630 | 50 |



JAFFNA EDUCATION

www.lkedu.lk

**25.** ஒரு வாகனத்தின் எரிபொருள் தாங்கியில் 12 லீற்றர் 450 மில்லிலீற்றர் எரிபொருளும் வேறொரு வாகனத்தின் எரிபொருள் தாங்கியில் 7 லீற்றர் 650 மில்லிலீற்றர் எரிபொருளும் உள்ளன. இரண்டு வாகனங்களிலும் உள்ள எரிபொருளின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?

..... லீற்றர் ..... மில்லிலீற்றர்


**26.** பை ஒன்றில் 2kg 750 g நெல் இருந்தது. அதற்குள் மேலும் 1kg 450 g நெல் இடப்பட்டது இப்போது பையிலுள்ள நெல்லின் மொத்த நிறை யாது?

..... kg .....g

**27.** A என்ற இடத்திலிருந்து புறப்பட்ட பேருந்து 3km 750 m பயணம் செய்து B என்ற இடத்தை அடைந்தது. B என்ற இடத்திலிருந்து புறப்பட்ட அந்தப் பேருந்து 6km 500m பயணம் செய்து C என்ற இடத்தை அடைந்தது. A என்ற இடத்திலிருந்து B என்ற இடத்தினூடாக C என்ற இடம் வரையான மொத்த தூரம் யாது?


..... km.....m

**28.** உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.



.....

***29.*** *நாளொன்றில் எரிபொருள் விற்பனை நிலையமொன்றில் எரிபொருள் நிரப்பிய வாகனங்கள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.*




*குறித்த நாளில் எரிபொருளை நிரப்பிய வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?*

.....

- ***இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.***

*30.* 'தேசத்தின் மகத்துவத்தை' தேசியக் கொடியில் வெளிப்படுத்தும் குறியீடு எது?

*(1)* பச்சை நிறப் பட்டிகள்
*(2)* நான்கு அரச இலைகள்
*(3)* சிவப்பு நிறப் பின்னணி

*31* பின்வருவனவற்றில் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்படக்கூடிய நோய் எது?

*(1)* டெங்கு *(2)* நீரிழிவு *(3)* கொப்பளிப்பான்

*32* கால்களில் நகங்களை உடைய விலங்குகளின் கூட்டம் மாத்திரம் இடம்பெறும் விடை எது?

*(1)* நரி, புலி, மான் *(2)* பூனை, எலி, மைனா *(3)* கழுகு, உடும்பு, கழுதை

*33.* தோட்டத்திலுள்ள குப்பைகளைப் பசளையாக மாற்றித்தருவதற்கு உதவி செய்யும் பிராணி எது?


*(1)* உடும்பு *(2)* மாடு *(3)* மண்புழு

JAFFNA EDUCATION

www.lkedu.lk

34 இரும்புச்சத்து அதிகம் அடங்கியுள்ள உணவுப்பொருள் எது?

(1) அவரை (2) எள்ளு (3) சாரணைக் கீரை

35. 

இவ்வுபகரணத்தின் பயன்பாடு அல்லாதது எது?

1) திருகாணியைக் கழற்றுதல்
2) மீன்ரின் மூடியைத் திறத்தல்
3) போத்தலின் தக்கையைக் கழற்றுதல்

36. அனைத்துமுண்ணி விலங்குகளை மாத்திரம் கொண்ட விடை எது?


(1) நாய், பூனை, காகம், கழுகு
(2) மீன், நாய், காகம், மைனா
(3) கோழி, மயில், சிட்டுக்குருவி, குரங்கு

37. பயிர்ச் செய்கைக்குப் பாதகமான பிராணிகளைக் கொண்டமைந்த கூட்டம் எது?

(1) சிற்றுண்ணி, ஓணான், ஆந்தை, நத்தை
(2) தேனீ, வண்டு, மயிர்கொட்டி, தண்டுகோதி
(3) நத்தை, அந்துப்பூச்சி, வெட்டுக்கிளி, அணில்

38. கடுமையான வெயில் காலத்தில் வீதியில் செல்லும்போது தூரத்தில் வீதியின் குறுக்கே தெரியும் நீர்?

(1) மழைநீர் (2) கானல் நீர் (3) பன்னீர்

39. 

அருகே தரப்பட்டுள்ள பிராணியில் காணப்படும் விசேட இயல்பு எது?

1) பாதுகாப்பாக தோலின் நிறத்தை மாற்றுதல்
2) இரையைக் கண்டறிய மீசை இருத்தல்
3) மேற்பரப்பில் ஒட்டி இருக்க விசேட பாதங்கள் இருத்தல்

40. பின்வருவனவற்றில் பானமாக தயாரித்துக் கொள்ளப் பயன்படுவது எது?


(1) ஈரப்பலா (2) அம்பரல்லா (3) பசளி

41. நூல் நிலையம் ஒன்றினுள் செய்யக் கூடிய செயல் யாது?

(1) சத்தமிட்டுப் புத்தகங்களை வாசித்தல்.
(2) வாசிக்கும் புத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடுதல்.
(3) வாசித்த புத்தகங்களை குறித்த இடங்களில் வைத்தல்.

42. படத்திலே காட்டப்பட்டுள்ள ஹஸ்பர்வீல் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள் எது?

(1) நோயாளர் தள்ளு வண்டி
(2) ஒற்றைச் சில்லு வண்டி
(3) பம்பர வண்டி




43. 'பின்னால் ஏறுங்கள் முன்னே செல்லுங்கள் உடலில் மோதாது உடையை மிதிக்காது முன்னால் இறங்குங்கள்' இக் கவிதை வரிகளுக்குப் பொருத்தமான வாகனம் எது?

(1) புகையிரதம் (2) விமானம் (3) பேருந்து

44. உலோகக் கரண்டியில் சிறிதளவு நீரை ஊற்றி உருவில் காட்டப்பட்டுள்ளவாறு எரியும் மெழுகுவர்த்தியின் சுவாலை மீது பிடிக்கப்படுகிறது. இப்போது நீருக்கு நிகழ்வது யாது?

(1) நீர் படிப்படியாகக் குறைதல்
(2) நீரின் நிறம் மாற்றமடைதல்
(3) நீர் திண்மமாக மாற்றமடைதல்



JAFFNA EDUCATION

www.lkedu.lk

45. மனிதன் தொடர்பாடலுக்காக நவீன காலத்தில் பயன்படுத்தும் முறை, ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறை என்பவற்றை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் முறை எது?

(1) குரல்வழியஞ்சலைப் பயன்படுத்தலும் தொலைபேசியும்
(2) தீக்குவியல் மூட்டலும் தொலைபேசியைப் பயன்படுத்தலும்
(3) தொலைநகல் அனுப்புதலும் தீக்குவியல் மூட்டலும்

46. வீதியைக் கடக்கும் சந்தர்ப்பங்களில் ஈடுபடக்கூடாத செயல் எது?

(1) வலது, இடது பக்கங்களை அவதானித்தவாறு கவனத்துடன் செல்லல்.
(2) கைத்தொலைபேசியைப் பயன்படுத்தியவாறு வீதியைக்கடத்தல்
(3) பொருத்தமான சந்தர்ப்பம் கிடைத்த பின்னர் வீதியைக்கடத்தல்

47. இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய பாதிப்பாக அமையக்கூடியது எது?

(1) நச்சுத்தன்மையற்ற உணவுப்பொருள் கிடைத்தல்
(2) உணவுப் பொருளுடன் நச்சுத்தன்மை சேராதிருத்தல்
(3) நீண்டகாலப்பகுதியில் உடல் உபாதைகள் ஏற்படுதல்.

48. வீட்டிலே மின்குமிழ் தாங்கியுடன் மின்குமிழ் ஒன்றினைப் பொருத்தும்போது அவசியமாச் செய்ய வேண்டியது எது?

(1) பிரதான ஆளியைச் செயலில் வைத்திருத்தல்
(2) பிரதான ஆளியை தொடர்பறுத்தல்
(3) காவலிட்ட செப்புக்கம்பியை ஆளியுடன் பொருத்தல்

49. எமது நாட்டில் அரசினால் இலவசமாக வழங்கப்படும் சேவைகளை மட்டும் கொண்ட விடைகள் எவை?
(1) கல்வி, போக்குவரத்து
(2) மின்சாரம், சுகாதாரம்
(3) சுகாதாரம், கல்வி

50. 'கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட வேண்டிய செயலாக அமைவது எது?

(1) சிறுவர் துஸ்பிரயோகம் (2) மனம்நோகப் பேசுதல் (3) நிதானமாக நடத்தல்

51. ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருந்த பந்து ஒன்று தொடர்ச்சியாக உருண்டு கொண்டு சென்றது எனின், அதற்கான காரணம்.

(1) பந்து வைக்கப்பட்ட இடம் மணற்பாங்கான தரை ஆகும்
(2) பந்து வைக்கப்பட்ட இடம் பரல் கொண்ட சம தரை ஆகும்
(3) பந்து வைக்கப்பட்ட இடம் சாய்வான சீமெந்துத்தரை ஆகும்

52. புவிக்கோள் மீது சூரிய ஒளிபடும் பகுதிக்கு எதிரான பகுதியில் இலங்கை காணப்படுகின்ற போது இலங்கை தொடர்பாகக் கூறக்கூடியது

(1) இலங்கையில் கடுமையான குளிர் உணரப்படும்.
(2) இலங்கையில் பகற் காலம் காணப்படும்
(3) இலங்கையில் இரவு காலம் காணப்படும்

53. கப்பலில் திசைகாட்டி பொருத்தப்பட்டிருப்பதற்கான பிரதான நோக்கம் எது?

(1) தொலைவில் உள்ள இடங்களை அவதானிப்பதற்கு
(2) சிறப்பான துறைமுகங்களை இனங்காண்பதற்கு
(3) செல்ல வேண்டிய திசையைக் கண்டறிவதற்கு

54. வகுப்பறையானது அசுத்தமாகவும் நேர்த்தியின்றியும் காணப்படும்போது உடனடியாக மனதில் ஏற்படக்கூடிய உணர்வு எது?

(1) மகிழ்ச்சி (2) அருவருப்பு (3) அச்சம்

JAFFNA EDUCATION

www.lkedu.lk

55. கீழே தரப்பட்டுள்ள உபகரணத்தை அதிகம் பயன்படுத்துவர்கள் யார்?



(1) மின்சார வேலைகளைச் செய்வோர்
(2) கட்டட வேலைகளைச் செய்வோர்
(3) தையல் வேலைகளைச் செய்வோர்

56. "ஒரு நாடு எனற வகையில், எமக்கு மரபுரிமையாகக் கிடைத்துள்ள தனித்துவமான பண்புகளைக்கொண்ட அனைத்தும் தேசிய மரபுரிமைகள் ஆகும்." உலக மரபுரிமை, தேசிய மரபுரிமைகளாக முறையே கணிப்புப் பெற்றுள்ளவை எவை?

(1) தலதாமாளிகை, பொம்மலாட்டம்
(2) திரிபீடகம், சிகிரியா
(3) சிங்கராசவனம், மகாபோதி விருட்சம்

57. தத்தமது தாய் மொழியுடன் மேலும் ஒரு மொழியேனும் கற்பதால் ஏற்படக்கூடிய அனுகூலமாக அமைவது எது?

(1) வெவ்வேறு இன மக்களுக்கிடையிலான ஒற்றுமை குறையும்
(2) வெவ்வேறு இன மக்களுக்கிடையிலான ஒற்றுமை அதிகரிக்கும்
(3) இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மறைந்துபோகும்

58. "எனது கழுத்தை ஒரு வாள் வீச்சில் துண்டித்து விடுங்கள்" என்று வீரத்துடன் பேசிய தேசிய வீரர் யார் ?

(1) கொங்காலேகொட பண்டா (2) கெப்பெட்டிப்பொல திசாவ (3) மொல்லிகொட திசாவ

59. தற்போது நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டினைக் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் குறியீடு எது?




(1)



(2)




(3)

**60. "உலகத்தை வனப்பாக்கும் விலங்குகள்"** எனும் தலைப்பின் கீழ் **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொருவாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

★★★★

**முற்றிலும் இலவசமாக** இந்த வினாத்தளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்